[1993 ஏப்ரல் 8]

லேபரட்டரிக்காக 'போஸ்ட்' செய்யப்படுவதில்லை என்பது எனக்குத் தெரிந்த உண்மை என்று கருதுகிறேன். எனவே, இதனால் மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையிலே எந்தத் துறையிலே பயில வேண்டுமென்று கருதி போவார்களே தவிர, மற்றபடி இது அவர்களுக்கு நேரடியாகப் பயன்படாது என்றே கருதுகிறேன். எனவேதான், அதன்காரணமாக மாணவர்களுக்கு எந்த இழப்பும் ஏற்பட்டு விடாது என்றும் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 284 டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

284—

டாம்ப்கால் நிறுவனத்திற்காக மூலிகைப் பண்ணை ஏற்படுத்தல்

*10111 டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் Tampcol நிறுவனத்திற்கு மூலிகைப் பண்ணை ஏற்படுத்த அனுமதித்து உள்ளதால் அந்நிறுவனத்தில் உள்ள அரசு மருந்தாளுநர்களுக்குப் பயிற்சிக் கொடுத்து, வரும் ஆண்டில் அரசு மூலிகைப் பண்ணைகளை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மருந்தாளுநர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, B. Pharm மற்றும் D. Pharm படித்த வேலையில்லா பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வண்ணம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த 'இல்லை' என்ற பதிலை மாற்றி மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை என்பது எவ்வளவு பேர் படித்து இருக்கிறார்களோ அவ்வளவு பேர்களுக்கும் நாம் வேலை கொடுத்துவிட முடியாது. அவர்களுக்கு வேலை கொடுக்கின்ற முறையிலே எவ்வளவு தேவையோ அந்த அளவுக்குத்தான் கொடுக்க முடியும். எனவே அவர்களுக்கு அரசுப் பணிக்காக நாம் இடத்தை ஏற்படுத்திக் கொடுக்கிற அளவிலே நிச்சயமாகச் செய்ய முடியாது. அதிலே நிதிப் பிரச்சினையும் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்

எனவே, அதன் காரணத்தால் அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பது என்பது முடியாத காரியம். ஆனால் ஏற்கனவே நம்மிடத்திலே தேவையான அளவுக்கு மருந்தாளுநர்கள் இருக்கிறார்கள். சில இடங்களில் மட்டும் காலியாக உள்ளன. அதை நிரப்ப வேண்டுமென்ற நடவடிக்கையை நாம் எடுத்திருக்கிறோம். எனவே, தனிப்பட்ட முறையிலே அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதிலே நமக்குப் பயன் இருக்காது என்று நான் நம்புகிறேன்.

டாக்டர் வெ சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே திருநெல்வேலி மாவட்டம் அபிஷேகப்பட்டியில் அமைக்கப்பட இருக்கும் 'டாம்ப்கால்' நிறுவனத்திற்குச் சொந்தமான மூலிகைப் பண்ணையில் மருத்துவத் துறையில் மட்டுமல்ல, வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மூலிகை சம்பந்தப்பட்ட சிறப்புப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு 180.38 ஏக்கர் கொடுப்பதற்காக ஒப்புதல் தரப்பட்டிருக்கிறது. இன்னும் நமக்கு அந்த இடம் கிடைக்கவில்லை. அந்த இடம் கிடைத்த பின்னாலே அதைப்பற்றி நாம் ஆய்வு செய்யலாம். ஆனால் ஒரு பயிற்சி என்று அரசாங்கம் கொடுத்த பின்பு அந்தப்பயிற்சியைப் பயன்படுத்திக் கொண்டு வெளியிலே தங்களால் சுயமாக என்ன தொழிலைச் செய்ய முடியும் என்று முயற்சி எடுக்க வேண்டுமேயொழிய, அரசாங்கம் ஒரு பயிற்சி கொடுத்து விட்டால், அரசாங்கமே வேலை கொடுத்துவிடும் என்ற எண்ணத்தில் இருக்கிற காரணத்தினால்தான், இதிலே சிக்கல்களும், இடையூறுகளும் வருகின்றன. அரசாங்கம் அந்த மாதிரி பயிற்சியைத் துவங்குவதிலும் யோசனை செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, பயிற்சி பெறக்கூடியவர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டு, தனியாகத் தொழில் செய்வதற்கு முயற்சி எடுப்பார்களேயானால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம். ஆனால் பயிற்சி கொடுத்த அரசாங்கமே அவர்களுக்கு வேலை கொடுக்கும் என்று எதிர்பார்ப்பார்களேயானால் நிச்சயமாக அதை நம்மால் செய்ய இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975ஆம் ஆண்டிலிருந்து மருந்தாளுநர் படிப்பைப்படித்துவிட்டு வேலையில்லாமல் மெடிக்கல் ஸ்டோர்களில் 200 ரூபாய் சம்பளத்திற்குப் பணிபுரியக் கூடிய ஏழை மருந்தாளுநர்களுக்கு இதுபோன்ற 'டாம்ப்கால்' நிறுவனத்தில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யார் வேலையில்லாமல் இருக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய கடமையாக, எண்ணமாக இருக்கிறது. ஆனால் அரசைப் பொறுத்தவரையில் மக்களுடைய வரிப் பணத்திலே இருந்து தான் சம்பளத்தைக் கொடுக்கிறோம், எனவே, அந்த வரிப் பணத்தைக் கொடுக்கிறபோது, எந்த எந்தத் துறையில் எவ்வளவு பேர் தேவையோ அவ்வளவு பேர்களைமட்டும் தான் அரசாங்கம் எடுக்கவேண்டுமேயொழிய, வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்கிற காரணத்திற்காக, நிறைய பேர்களை எடுத்துவிட முடியாது என்பதைத் திட்டவட்டமாக இந்த நேரத்திலே அறிவிக்க விரும்புகிறேன். காரணம், நிதிப் பிரச்சினை மட்டுமல்ல. சம்பளத்திற்கு என்று எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். எனவே ஒரு துறைக்கு எவ்வளவு பேர் தேவையோ அதற்கு மேலே நிச்சயமாக எடுக்க வேண்டுமென்று யாரையும் வற்புறுத்துவது நியாயமாக இருக்க முடியாது. அப்படி வற்புறுத்துவோமேயானால் நிச்சயமாக திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்படுகின்ற பணம் குறைந்து கொண்டே போய்விடும் ஒரு நேரத்திலே Nil என்ற நிலைக்கு வந்து விடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே, யார் பயிற்சி பெற்றாலும் அதைப் பயன்படுத்திக்கொண்டு, தனிப்பட்ட முறையிலே அவர்கள் அந்தப் படிப்பை வைத்துக் கொண்டு தொழிலைச் செய்வதற்கான முயற்சியை மேற்கொள்வதுதான் நம்முடைய வளர்ச்சிக்குக்கூடப் பயன் உள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, அந்தத் துறையிலே வருகின்றபோது, சொந்தமாகத் தொழிலை தெரிந்துகொள்ளவேண்டும். தொழிலை ஆரம்பிக்கவேண்டுமென்ற உணர்வோடு அவர்கள் அந்தப் படிப்பைத் துவங்க வேண்டுமென்பதைத்தான் என்னுடைய எண்ணமாக நான் இங்கே வைக்க விரும்புகிறேன். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களும் கூட அரசுப் பணிக்காக கிளரிக்கல் வேலைக்காக அவர்களை அனுப்புவதை அதற்கு முயற்சி எடுப்பதைவிட நாம் அவர்களை சுயமாக தொழில் செய்து அவர்களுடைய வாழ்க்கையை ஒளிமயமாக ஆக்குவதற்கு ஊக்கப்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 285. திருமதி அ. தி. சரஸ்வதி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.